## பருத்தித்துறைத் துறைமுகத்திலிருந்து திரும்புகையில்

# நல்லூர் ப. நோ. கூ. ச லொறிகள் மீது ஹெலி சரமாரிச்சூடு; 10 பேர் காயம்

பருத்தித்துறைத் துறைமுகத்தில் இருந்து அத்தியாவசிய உணவுப் பொருட்களை ஏற்றிக்கொண்டு வந்த நல்லூர் பல. நோ. கூ. சங்கத்தைச் சேர்ந்த இரண்டு லொறிகள் மீது ஹெலிகொப்டர் ஒன்று சரமாரியாகச் சுட்டதில் 10 பேர் காயமடைந்தனர். மயிரிழையில் அவர்கள் உயிர் பிழைத்துள்ளனர். நேற்றுப்பகல் 10 மணியளவில் இந்த இரண்டு லொறிகளும் உணவுப்பொருட்களுடன் வல்லைச் சந்திக்கும் ஆவரங்கால் சந்திக்குமிடையே உள்ள வெளியில் வந்து கொண்டிருந்த போது பலாலிப் பகுதியில் இருந்து வந்த ஹெலி லொறிகளைத் துரத்திச் சுட்டபோது சாரதிகள் லொறிகளை நிறுத்தியவுடன் பயணம் செய்த அனைவரும் லொறியின் கீழ்ப் பாகத்தில் பதுங்கிக்கொண்டதால் உயிர்பிழைத்தனர். ஆயினும் காயம் ஏற்பட்டது. இச்சம்பவத்தில் களஞ்சியப் பொறுப்பாளர் சி புவனேந்திரன், சாரதிகள் பொ. பத்மநாதன், சு சிவராசா, கிளீனர்கள் சி இராசரத்தினம், அ. சாம்பசிவம் —04 ஆம் பக்கம் பார்க்க

பக்கங்கள் நான்கு விலை ரூபா:-3-50

# முரசொலி

முரசு 04 ஒலி 234 வெள்ளி 05-10-1990 (புரட்டாதி 19) ஹ.அவ்வல் 15

## ★ சிங்களவர் செறிந்து வாழும் மதவாச்சி ஊடான மன்னார் வீதியில்

# புலிகள் ஆக்ரோஷத் தாக்குதல்

# நேற்று 8 ராணுவத்தினர் பலி

விடுதலைப்புலிகள் நேற்றுக்காலை 6.30மணியளவில் மதவாச்சி-மன்னார் வீதியில் ரோந்து சென்று கொண்டிருந்த ஸ்ரீலங்கா இராணுவத்தினர் மீது மிகப்பலமான தாக்குதலை மின்னல் வேகத்தில் ஆக்ரோஷத்துடன் மேற்கொண்டதில் இராணுவச் சிப்பாய்கள் எண்மரின் உயிர் ஸ்தலத்திலேயே பிரிந்ததாக அறிவிக்கப்படுகிறது. இச்சம்பவத்தில் பல இராணுவத்தினர் காயமடைந்துமுள்ளனர்,

குறிப்பிட்ட இராணுவத் தாக்குதலை வெற்றிகரமாக நடத்திய புலிகள் இராணுவத்தினரிடமிருந்த ஆயுதங்களைக் கைப்பற்றியதாகவும் தெரிவிக்கப் படுகிறது.

யாக்கவேவா இராணுவ முகாமிலிருந்து காட்டுமாங்குளம் இராணுவ முகாமிற்கு பிரஸ்தாப இராணுவத்தினர், சென்றுகொண்டிருந்தபோதே புலிகள் வழிமறித்து இத்தாக்குதலை நடத்தியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விபரம்: ரி. 81 ரக எல். எம். ஜி-1, ரி. 56 ரக துப்பாக்கி-6, ரவைகள் 836, ரவைக்கூடு-21, ஜே. ஆர்.ரகக் கைக்குண்டு-4, தலைக் கவசம்-2, கோல்ஸ்ரர்-2, கிட் பாக் -1.

மேற்படி தாக்குதல் புலிகளால் மேற்கொள்ளப்பட்டதில் இராணுவத்தினர் எழுவர் கொல்லப்பட்டனர் என்றும் ஒருவர் காயமுற்றார் என்றும் ஸ்ரீலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள் நேற்றுப் பிற்பகல் தெரிவித்தன என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (71-ஸ்ரீ)

## கொடிகாமம் வரை மின் பரீட்சார்த்த முயற்சி வெற்றி

கிளிநொச்சியிலிருந்து குடாநாட்டின் சில பகுதிகளுக்கு மின்விநியோகத்தை வழங்குவதற்கான பரீட்சார்த்த முயற்சிகள் வெற்றியளித்திருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முயற்சியின் பயனாக 33 கே. வி. மார்க்கத்தில் கொடிகாமம் வரையிலான சில பகுதிகளுக்கு நேற்று முன்தினம் பிற்பகல் சிலநிமிட நேரம் மின்விநியோகம் கிடைத்தது.

33 கே. வி மின் மார்க்கத் —04ஆம் பக்கம் பார்க்க

## பாடசாலை ஆரம்பிப்பதற்கான விளக்க அறிக்கை கோரப்படுகிறது

யாழ் மாவட்டப் பாடசாலைகள் ஆரம்பிப்பது சம்பந்தமான தமது விளக்க அறிக்கைகளை எதிர்வரும் 10 ஆம் திகதி புதன்கிழமை காலை 10 மணிக்கு சகல உதவிக் கல்விப்பணிப்பாளர்களையும் கல்வித் திணைக்களத்தில் சமர்ப்பிக்குமாறு யாழ்கல்விப்பணிப்பாளர் ஆர். சுந்தரலிங்கம் கேட்டுள்ளார்.

சுற்று நிருபத்தில் குறிப்பிட்டபடி அகதிகள் தங்கியிருக்கும் பாடசாலைகள், மற்றும் இராணுவ நடவடிக் —04ஆம் பக்கம் பார்க்க

## அரச அதிபர் முயற்சி பலிதம்

## அரச ஊழியர்க்கும் இலவச நிவாரணப் பொருள்

அரச கூட்டுத்தாபன, உள்ளூராட்சிச் சபைகள் சார்ந்த ஊழியர்களுக்கு ஆறுமாத காலத்திற்கான நிவாரணப் பங்கீட்டுப் பொருட்கள் இலவசமாக வழங்கப்படவிருக்கின்றன.

யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் எடுத்த தீவிர முயற்சியின் பயனாக மேற்படி நிவாரணத்தை வழங்குமாறு அரசாங்கம் சுற்று நிருபம் ஒன்றினை யாழ் அரச அதிபருக்கு அனுப்பி வைத்துள்ளது.

இச் சுற்று நிருபத்தின்படி ஒரு குடும்பத்தில் உள்ள தனிநபர்ஒருவருக்கு 55 ரூபா, —04ஆம் பக்கம் பார்க்க

## புலிகளின் மீதான அச்சம்

## மக்களுக்கு ராணுவம் விடுக்கும் எச்சரிக்கை

ஊர்காவற்றுறையில் நிலைகொண்டுள்ள இராணுவத்தினர் தாம் தங்கியுள்ள இடங்கள் தம் எண்ணிக்கை மற்றும், வாகனாதிகள் பற்றிய விவரங்கள் எதையுமே புலிகளுக்கு வெளிப்படுத்தக் கூடாது என்று ஊற்காவற்றுறையை விட்டு வெளியே செல்லும் பொதுமக்களுக்கு எச்சரிக்கை செய்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தாம் நிலைகொண்டுள்ள இடங்களுக்கு அணித்தாக உள்ள கட்டிடங்களையும் —04ஆம் பக்கம் பார்க்க

## வீரவேங்கைகள் நினைவாக

## இன்று வடமராட்சியில் எழுச்சி ஊர்வலம், கூட்டம்

இலங்கை இந்திய அரசுகளின் கூட்டுச்சதியால் கடலில் கைதாகி பலாலி இராணுவ முகாமில் இயக்கத்தின் மரபுக்கமைய சயனைட் குப்பிகளை உட்கொண்டு 87-ம் ஆண்டு அக்டோபர் 5-ம் திகதி வீரமரணமடைந்த விடுதலைப் புலிகளின் முன்னணி உறுப்பினர்களான லெப். கேணல். குமரப்பா, லெப். கேணல். புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளின் 3-ம் ஆண்டு நினைவையொட்டி இன்று எழுச்சி ஊர்வலமும், அஞ்சலிக்கூட்டமும் நடைபெறவுள்ளன.

—04ஆம் பக்கம் பார்க்க

## காவலூரில் இராணுவம் குடும்பஸ்தரைக் குத்திக் கொன்றது

ஊர்காவற்றுறை பகுதியில் நிலைகொண்டிருக்கும் இராணுவத்தினரால் கரம்பொன் பகுதியில் வைத்து குடும்பஸ்தரான ஐந்து பிள்ளைகளின் தந்தை ஒருவர் துடிதுடிக்க கத்தியால் வெட்டிக் கொல்லப்பட்டார்,

இச்சம்பவம் கடந்த செவ் —04ஆம் பக்கம் பார்க்க

## மண்டைதீவில்

## 'கொக்கரக்கோ' ஓசையின்றி ★ விடியும் பொழுதுகள் ★

மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதிகளில் இப்போது வைகறைப்பொழுதில் 'கொக்கரக்கோ' ஓசை எழுவதே இல்லை. என்ன வாசகர்களே விழிக்கிறீர்களா? ஸ்ரீலங்கா இராணுவத்தினர் இங்கு முகாமிட்டு மூர்க்கத்தனம் புரிந்தவேளை வீடுவீடாகச் சென்று சேவல்களைக் கலைத்துப் பிடித்து ஏப்பமிட்டுவிட்டதே இதற்குக் காரணமாகும். இராணுவம் இங்கு மக்கள் அன்றாடம் உணவிற்கென — 04 ஆம் பக்கம் பார்க்க

## இலவச நிவாரணப் பொருள்; ஓய்வூதியக்காரரர் புறக்கணிப்பு!

அரசாங்க ஊழியர்களுக்கு இலவச நிவாரணப் பொருட்களை வழங்க முன்வந்துள்ள அரசாங்கம் இது விடயத்தில் ஒய்வூதியம் பெறுவோரைப் புறக்கணித்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஏற்கனவே மூன்று மாதம் பணம் கிடைக்காது இன்னலுறும் அவர்களுக்கு அரசாங்கத்தின் இப்புறக்கணிப்பு மேலும் வேதனையை ஏற்படுத்தியுள்ளது.

யாழ் மாவட்டத்தில் இருபதாயிரத்துக்கும் மேற்பட்ட ஓய்வூதியக்காரர்கள் உள்ளனர்.

இது இவ்வாறு இருக்க, யாழ் மாவட்டத்தில் ஒய்வூதியம் பெறுபவர்களின் கொடுப்பனவுகளை பணமாக வழங்க யாழ் அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிறட் நட —04ஆம் பக்கம் பார்க்க

பொதுமக்களின் வேண்டுகோளுக்கிணங்க மீண்டும் பிரசுரமாகிறது

# இலவச பங்கீட்டுப் பொருள் விநியோக புதிய அட்டவணை விபரங்கள்

| உணவுப்பொருள் | ஒரு அங்கத்தவர் | | | இரண்டு அங்கத்தவர் | | | மூன்று அங்கத்தவர் | | | நான்கு அங்கத்தவர் | | | ஐந்தும் அதற்கு மேற்பட்ட அங். | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | கிலோ | ரூ. | ச. | கிலோ | ரூ. | ச. | கிலோ | ரூ. | ச. | கிலோ | ரூ. | ச. | கிலோ | ரூ. | ச |
| அரிசி | 2 | 26 | 00 | 4 | 52 | 00 | 5 | 65 | 00 | 6 | 78 | 00 | 8 | 104 | 00 |
| மா | 1 | 14 | 25 | 2 | 28 | 50 | 2½ | 35 | 75 | 3 | 42 | 75 | 3 | 42 | 75 |
| சீனி | ½ | 15 | 00 | 1 | 30 | 00 | 1 | 30 | 00 | 1½ | 45 | 00 | 2 | 60 | 00 |
| பருப்பு | 1/4 | 10 | 00 | 1/2 | 20 | 00 | ½ | 20 | 00 | 3/4 | 30 | 00 | 1 | 40 | 00 |
| பால் மா | — | — | — | — | — | — | 1 | 40 | 40 | 1 | 40 | 40 | 1 | 40 | 40 |
| தீப்பெட்டி / மெழுகுதிரி/ சோப்வகை / கறிச்சரக்கு | — | 18 | 75 | — | 23 | 50 | — | 18 | 85 | — | 15 | 85 | — | 27 | 85 |
| மொத்தப்பெறுமதி | | 84 | 00 | | 154 | 00 | | 210 | 00 | | 252 | 00 | | 315 | 00 |

* ஆறு அல்லது அதற்கு மேற்பட்ட அங்கத்தவர்கள் ஒரு குடும்பத்தில் இருந்தால் அவர்கள் விரும்பினால் ஐந்தாவது தொகுதியில் சில்லறைப் பொருட்களுக்காக உள்ள தொகைக்கு 2 கிலோ வெள்ளைப் பச்சை அரிசியை மேலதிகமாகப் பெற்றுக்கொள்ளலாம்.

* சகல பங்கீட்டுப் பொருட்களும் 07 - 10 - 1990 க்கு முன்பு பெற்றுக்கொள்ளப்படவேண்டும்.

## புங்குடுதீவில் இலட்சார்ச்சனை

புங்குடுதீவு மேற்கு கிராஞ்சியம்பதி சிவன்கோயிலில் கௌரி நோன்பு இலட்சார்ச்சனை நடைபெறுகின்றது. இருபத்தொருநாட்கள் நடைபெறும் இவ்விரத நிறைவில் கௌரிகாப்பு அணிவிக்கும் நிகழ்வும் இடம்பெற உள்ளது.

சிவாகமசிரோன்மணி சிவஸ்ரீ. ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்கள் இலட்சார்சசனையைத் தொடக்கி நடத்தி வருகின்றார். (கி)

## அமைதி வேண்டிப் பாத யாத்திரை

நாட்டின் அமைதி வேண்டி ஒரு திருத்தலப் பாதயாத்திரையைச் சரசாலை இந்து இளைஞர் மன்றம் ஆரம்பித்துள்ளது.

சரசாலை, நுணாவில் சிதம்பரவிநாயகர் ஆலயத்தில் ஆரம்பித்த இப்பாதயாத்திரை மட்டுவில் கல்வம் சிவன் கோவில் சென்று, பின் சங்கத்தானை மீனாட்சி அம்மன் கோவிலைச் சென்றடைந்தது. (கி)

# மண்டைதீவில் எலும்புக்கூடுகள்; மக்கள் குடியிருக்க அச்சம்

மண்டைதீவின் பல பகுதிகளிலிருந்தும் பெருமளவில் அங்கொன்றும், இங்கொன்றுமாக மனித எலும்புக் கூடுகளும், பழுதடைந்த பிணங்களும் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இராணுவம் மண்டைதீவில் இருந்து வெளியேறிய பின் அங்கு சென்ற மக்கள், எலும்புக் கூடுகளையும், மண்டை ஓடுகளையுமே காண முடிந்தது.

கிணறுகள், மலசலகூடங்கள், பதுங்கு குழிகளுக்குள் சடலங்கள் போடப்பட்டிருந்தன. தாமோதரம்பிள்ளை என்பவரின் வீட்டில் உள்ள பதுங்கு குழிக்குள் மூன்று சடலங்களும், கந்தலிங்கம் என்பவரின் வீட்டில் உள்ள மலசல கூடத்தில் நான்கு சடலங்களும் கிடக்கக் காணப்பட்டன. இச்சடலங்கள் எதுவும் இனங்காண முடியாத அளவிற்கு சிதைவுற்றிருந்தன.

மண்டைதீவில் இருந்து இராணுவத்தினர் வெளியேறும் முன் பல சடலங்களை மண்டைதீவு மகாவித்தியாலய வளவினுள் வைத்து எரியூட்டிச் சென்றுள்ளனர்.

அங்கு மக்கள் செல்லும் போது இச்சடலங்கள் அரைகுறையான நிலையில் எரிந்து கொண்டிருந்தன.

இவர்கள் இராணுவத்தால் கைது செய்யப்பட்டவர்களாக இருக்கலாம் எனச்சந்தேகிக்கப்படுகிறது.

மண்டைதீவில் தெருத்தெருவாகச் சடலங்கள் கிடப்பதைத் தொடர்ந்து அங்கு மக்கள் குடியிருப்பதற்கு அஞ்சுகின்றனர்.

இது இவ்வாறிருக்க மண்டைதீவில் நிலை கொண்டிருந்த இராணுவம்மண்டைதீவு மகாவித்தியாலயத்தைக் கொலைக் களமாகப் பாவித்துள்ளது.

அங்குள்ள அறைச்சுவர்களில் இரத்தக்கறைகள் காணப்படுவதோடு அப்பகுதியில் இரத்தம் தோய்ந்த துணிகளும் காணப்படுகின்றன.

இதேவேளை மண்கும்பான் பாடசாலையில் உள்ள அகதி முகாமில் இருந்து இராணுவத்தால் அழைத்துச் செல்லப்பட்ட 32 இளைஞர்களின் நிலை பற்றி இதுவரை எதுவும் தெரியவில்லை. (ப 12 கி)

## காலபோக நெற்செய்கைக்கு
# கப்பலில் உரம் தருவித்து பங்கிட்டு வழங்க ஏற்பாடு

யாழ் மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கைக்குத் தேவையான உர வகைகளை இம்மாத நடுப்பகுதிக்கிடையில் கப்பல் மூலம் தருவித்து விநியோகிப்பதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன,

இது சம்பந்தமான முக்கிய கலந்துரையாடல் ஒன்று நல்லூரில் இடம்பெற்றபோது, யாழ் மாவட்டகம நலச் சேவை உதவி ஆணையாளர் எஸ். சிவசாமி, உரக் கூட்டுத்தாபனத்தில் வடமாகாண சந்தைப்படுத்தல் உத்தியோகத்தர் ஜி. சிதம்பரநாதன், மற்றும் பெரும்பாக உத்தியோகத்தர்களும் இதில்கலந்து கொண்டனர்.

காங்கேசன்துறையில் உள்ள உரக்களஞ்சியம் தற்சமயம் பாவனையில் இல்லாததினால் கப்பல் மூலம் தருவிக்கப்படும் உரத்தை தேவையைப் பொறுத்து விவசாயிகளுக்கு பங்கிட்டடிப்படையில் வழங்குவது பற்றியும்இங்கு ஆராயப்பட்டது.

காலபோக நெற்செய்கைக்கு யாழ் மாவட்டத்திற்கு மொத்தம் 7250 மெட்ரிக் தொன் உரம் தேவையெனக் கணிக்கப்பட்டுள்ளது. கி

## நஞ்சுண்டு மண்ணுக்காய் மடிந்தது...

பன்னிரு புலிகள் பார்த்திருக்க எமைவிட்டுக்
கண்களை மூடிக் காற்றிலே கலந்தநாள்!
பொன்னான உடல்கள் பூமியில் எரிந்தங்கே
கன்னல் தமிழுக்குக் காவிய மானநாள்!

பாசத் தமிழுக்குப் பட்டாடை கட்டிவிட்ட
தேசத்தின் புதல்வர் தீயிலே வெந்தநாள்!
நீசரை நம்பியதால் நிர்மூல மாகியங்கே
வாச மலர்கள் வெந்தணலில் விழுந்தநாள்!

தன்னினம் வாழத் தவிப்போடு போராடி
மண்ணுக்குத் தங்க(ள்) மறவுடலைத் தந்தநாள்!
எண்ணி முடியுமா இத்துயரம் என்றென்றும்?
கண்ணீரின் ஊற்றுக் காலமெலாம் வற்றுமோ?

நெஞ்சம் முழுதும் நிறைந்திட்ட தளபதிகள்
பஞ்சாகி எமைவிட்டுப் பறந்தநாள் மறக்குமோ?
வெஞ்சமரில் வீழ்ந்து வீரத்தேர் ஓட்டியோர்
நஞ்சுண்டு மண்ணுக்காய் மடிந்தது மறக்குமோ?

— மு. வே. யோ. வாஞ்சிநாதன்

## முரசொலிக்கு வந்த கடிதம்

# இலவச உணவு விநியோகத்தில் அரச ஊழியர் புறக்கணிப்பு

ஆசிரியர்
முரசொலி,

1500 ரூபாவுக்குட்பட்ட வருமானம் பெறும் அரச ஊழியர்களுக்கு இலவசமாகப் பங்கீட்டு அடிப்படையில் உணவு வழங்கப்படும் என்ற அறிவிப்பானது வெறுமனே கண்துடைப்பானதாகும்.

ஏனெனில் ஒரு அரச ஊழியரின் (ஆகக்குறைந்ததரம்) ஆகக்குறைந்த சம்பளம் 1250+ 260+200=1510 ரூபா ஆகும். எனவே இத் திட்டத்தினால் எந்த ஒரு அரச ஊழியரும் பயனடையப் போவதில்லை.

இதனை 1500 ரூபாவுக்கு உட்பட்ட அடிப்படைச் சம்பளம் பெறும் அரச ஊழியருக்கு என மாற்றினால் 25 சதவீதமான அரச ஊழியர்கள் இதனால் பயனடைவார்கள். சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

நல்லூர் அ. குருநாதன்

# கிளி. தபால்கள் வந்தன

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பூநகரி, பளை, கிளிநொச்சி, ஆனையிறவு, பரந்தன் ஆகிய தபால் நிலையங்களுக்குச் சேரவேண்டிய தபால்கள் அடங்கிய முப்பத்திமூன்று பொதிகள் கிளிநொச்சி மாவட்ட மேலதிக அரசாங்க அதிபரினால் கொழும்பில் பொறுப்பேற்கப்பட்டு லொறிமூலம் கொண்டு வரப்பட்டு பூநகரி தபால் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

கடந்த மூன்று மாதமாக கொழும்பில் தேங்கிக் கிடந்த தபாற் பொதிகளே இவை எனத் தெரியவருகிறது. பூநகரிக்குரிய தபால்கள் பிரிக்கப்பட்டு துரிதகெதியில் விநியோகம் நடைபெற்று வருகிறது. ஏனைய கந்தோர்கள் இயங்காததால் அக்கந்தோர்களுக்குரிய பொதிகள் பூநகரிக்கந்தோரில் உள்ளனவெனவும் தபால் அதிபர்கள் அப் பொதிகளைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்படுகிறது.

கடிதப் பொதிகளின் விபரம்: பளை ஒரு பொதி, கிளிநொச்சி 19 பொதி, பரந்தன் 8 பொதி, ஆனையிறவு ஒரு பொதி. (கி)

## உடன் தேவை

நல்ல நிலையிலுள்ள வலுகூடிய "பற்றறி சார்ஜர்'' ஒன்று உடனடியாகத் தேவை. வைத்திருப்போர் சகல விபரங்களையும் எழுதி, விளம்பர இல. 370, மே/பா. முரசொலி என விலாசமிட்டு விளம்பர கருமபீடத்தில் கொடுக்கவும்.

10034

## போட்டோஸ்ரட்

எவ்விதத் தாமதமுமின்றி
உடனே பெறலாம்
சித்ராலயா
351, கோவில் வீதி, நல்லூர்.
(நல்லூர்க் கந்தசுவாமி கோவிலுக்கு அண்மையில்)
வேலைநேரம் :
காலை 9 தொடக்கம் நண்பகல் 12 வரை

10033

## சிறு விளம்பரம்

சேவை

தெளிவான போட்டோஸ்ரற் பிரதிகளையும் அடையாள அட்டைகளையும் கவர் இட்டுஉடனடியாகப் பெற்றுக் கொள்ள கிளீன் கட் 37, சிவகுருநாதன் வீதி, பிறவுண் றோட். யாழ்ப்பாணம். (நீராவியடிப் பிள்ளையார்கோவிலுக்கு அண்மையில்) வேலை நேரம் தினமும் காலை 6 மணி தொடக்கம் மாலை 6மணி வரை.

10028

முரசொலி

எமது சிந்தனை

1990 - 10 - 05 வெள்ளி

''சமூகத்தில் இருபெரும் வர்க்கங்கள் உள: பசியாத போதும் உண்பவர்கள் ஒரு சாரார்; பசிக்கு உணவு கிடையாதவர்கள் மறுசாரார்''

— சம்போர்ட்

# 'இரண்டுங் கெட்டான்'

எமது சமூக அமைப்பில் மத்தியதர வர்க்கம் முக்கியமான பங்கு வகிக்கிறது. கல்வியறிவு பெற்றதொரு வர்க்கம் என்பதனால் மட்டுமன்றி, விழிப்புற்ற வர்க்கம் என்பதனாலும் மத்தியதர வர்க்கம் தலைமைத்துவப் பண்பு பெற்றுத் திகழ்கிறது. தவிரவும், முழுச் சனத்தொகையில் இவ்வர்க்கத்தின் விகிதாசாரம் கணிசமானது.

அரசாங்க, தனியார் துறைகளில் கடமையாற்றும் எழுதுவினைஞர்கள், வங்கி ஊழியர்கள், ஆசிரியர்கள், மருத்துவத்துறைப் பணியாளர்கள், தொழினுட்ப உதவியாளர்கள், அஞ்சல்—தொலைத்தொடர்பு அலுவலர்கள், போக்குவரத்துத்துறை, மின் சக்தித்துறை ஊழியர்கள், ஆலைத் தொழிலாளர்கள் என ஒரு பெரும் அணி இந்த வட்டத்துக்குள் அடங்கும்.

தொழிற்சங்க வரலாற்றில் மத்தியதர வர்க்கத்துக்குச் சிறப்பிடம் உண்டு. நாற்பதுகளிலும், ஐம்பதுகளிலும் இந்நாட்டில் நடந்த தொழிலாளர் போராட்டங்கள் அனைத்தும் மத்தியதர வர்க்கத்தால் வழி நடத்தப்பட்டவையே.

ஆனபோதும் இவ்வர்க்கத்தினர் வசதி படைத்தவர்கள் என்று சொல்ல முடியாது. பெரும்பாலானவர்கள் அலுவலகங்களில் கடமையாற்றுவதில் மடிப்புக் கலையாத (White-Collar) ஆடை அணிய வேண்டியுள்ளது. சொந்த வீடு இல்லாதவர்களும் வெளி மாவட்டங்களில் கடமையாற்றுபவர்களும் வாழ்க்கைச் செலவைச் சமாளிக்கத் திணறுகிறார்கள். சம்பளம் கிடைத்த இரண்டொருவாரம் கழிய கடன் வாங்கத் தொடங்கி விடுவார்கள். குடும்பத்தில் எதிர்பாராத செலவு ஏதும் ஏற்பட்டாலோ சொல்லவே தேவையில்லை.

நடந்துகொண்டிருக்கும் போரில் அதிகம் பாதிக்கப்பட்டது இந்த வர்க்கமே. திருகோணமலை, வவுனியா, முல்லைத்தீவு முதலிய வெளிமாவட்டங்களில் பணி புரிவோர் யாழ்ப்பாணம் வந்துள்ளார்கள். அந்த அந்த மாவட்டங்களுக்குத் திரும்பிப் போய்க் கடமை புரியும் அளவுக்குப் பாதுகாப்பு நிலைமை சீராகவில்லை; போக்குவரத்து வசதிகளும் இல்லை.

பெரும்பாலான ஊழியர்களுக்கு ஜூலை மாதம் கிடைத்த சம்பள முற்பணத்துக்குப் பிறகு எதுவித ஊதியமும் கிடைக்கவில்லை. வேறொரு சாரார் ஒகஸ்ட் மாதத்துக்குரிய சம்பளத்தைக் காசோலையாக வைத்திருக்கிறார்கள். அதுகூடக் கிடைக்காத வெளி மாவட்ட ஊழியர்கள் பலர்.

அன்றாடங் காய்ச்சிகளான இந்த வகுப்பினர் இரண்டு—மூன்று மாதம் சம்பளம் இல்லாது என்ன செய்வார்கள்? அவர்களுடைய குடும்பத்தவர்கள், அவர்களைச் சார்ந்தோர்களுக்கெல்லாம் பற்றாக்குறை, பசி, பட்டினி ஒன்றும் வரவே வராதா?

கடந்த மூன்று மாதமாக, வடக்கு-கிழக்கு மாநிலம் பட்டுள்ள பாடு சொல்லுந்தரமன்று. முன்னெப்பொழுதும் - இரண்டாம் உலகப் போர்க்காலத்திற்கூட - உயராத அளவுக்கு விலைவாசி உயர்ந்துள்ளதே, இந்த மக்கள் தம் வயிற்றைக் கழுவ என்ன பாடு படுகிறார்களோ!

யாருமே கவலைப்பட்டதாகத் தெரியவில்லை!

அரசாங்கத்தை ஒரு Model employer என்று சொல்வதுண்டு. அதாவது, வேலை கொடுப்போருக்கெல்லாம் அது ஒரு முன்னுதாரணம் — மாதிரி!

ஆனால் தனது ஊழியர்கள் என்ன ஆனார்கள் என்றுகூட இந்த அரசாங்கம் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை!

உயர் வர்க்கத்தைப் பொறுத்தவரையில் அவர்களுக்குத் தாக்குப்பிடிக்கும் 'பலம்' உண்டு.

சமூகத்தில் அடிமட்டத்தில் உள்ளவர்கள் அரசும் பொதுநல நிறுவனங்களும் வழங்கும் உதவிகளைப் பெற்றுக்கொள்வர். உணவு முத்திரை வைத்திருப்போர் இந்த ரகம்.

கையொப்பமிட்டுச் சம்பளம்பெறும் காரணத்தால் மத்தியதர வர்க்கத்தினர் எந்த நிவாரணத்துக்கும் 'புறம்' ஆகிவிட, ஆவணங்களுக்கு 'அகப்படாத' பலர் உணவுமுத்திரை முதலிய சலுகைகள் பெறுகிறார்கள்.

மத்தியதர வர்க்கமோ இரண்டுங்கெட்டான்!

இந் நிலையில்தான், யாழ் அரசாங்க அதிபர் முயற்சியால் 1500 ரூபாவுக்கு மேல் வருமானம் பெறுவோருக்கும் பங்கீட்டுப் பொருள்களை விலைக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

வரவேற்கத்தக்கதேயாயினும் இது போதுமானதன்று.

இடம்பெயர்ந்தும் ஊதியமின்றியும் அல்லற்படும் இம் மக்களிடம் உணவுப் பண்டம் வாங்கப் பணம் ஏது?

எனவே, ஏனையோருக்கு வழங்கப்பட்ட நிவாரணம் இவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும்.

அதுவே சமூக நீதி!

## இன்று சமூகமளிக்கக் கோரிக்கை

கீழ்க் குறிப்பிடப்படும் திணைக்களங்கள் அமைப்புக்களைச் சேர்ந்த பொறியியலாளர்கள் கட்டிடக்கலைஞர்கள், தொழில் நுட்பவியலாளர்கள் ஆகியோரையும் யாழ் மாநகரசபை எல்லைக்குள் அடங்கும் யாழ்ப்பாணம், நல்லூர் உதவி அரசாங்க அதிபர் பிரிவின் கீழுள்ள கிராம சேவை உத்தியோகஸ்தர்களையும் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி மண்டபத்தில் நடைபெறவிருக்கும் கலந்துரையாடலில் தவறாது கலந்து கொள்ளுமாறு தமிழீழ ஆய்வு நிறுவனம் கோருகின்றது.

இலங்கை மின்சார சபை, வீதி அபிவிருத்தி அதிகார சபை, பெருந்தெருக்கள் திணைக்களம், நகர அபிவிருத்தி அதிகார சபை, கட்டிடத் திணைக்களம், தொலை தொடர்பு திணைக்களம், உள்ளூர் ஆட்சி உதவி ஆணையாளர் அலுவலகம், கல்வித் திணைக்களம், யாழ் மாநகர சபை, தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை, கச்சேரி, யாழ் பல்கலைக்கழகம், காங்கேசன் சீமெந்துத் தொழிற்சாலை, லங்கா சீமெந்துத் தொழிற்சாலை. (ஸ்ரீ)

## ஹெலி தாக்குதல்

சில தினங்கள் இடைவெளியின் பின்னர் மீண்டும் சாவகச்சேரிப் பகுதியில் ஹெலித் தாக்குதல்கள் ஆரம்பமாகியுள்ளன. செவ்வாய்க்கிழமை காலை சாவகச்சேரிச்சந்தை, பஸ் நிலையப்பகுதி மேலாகச் சென்ற ஹெலி சிறிது நேரத்தின் பின்னர் திரும்பி வந்து சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தது. (36கி)

## அதிபர்கள்கூட்டம்

பண்டத்தரிப்புக்கொத்தணியின் கீழ் இயங்கும் பாடசாலை அதிபர்களுக்கான கூட்டம் பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரியில் 8-ம் திகதி திங்கட்கிழமை முற்பகல் பண்டத்தரிப்புக் கொத்தணி அதிபர் வே. நாகராசா தலைமையில் நடைபெறவுள்ளது. (13 கி)

## முதலுதவிச் சேவை

கடந்தமாதப் நாவற்குழி மகாவித்தியாலயத்தில் சென் ஜோன்ஸ் அம்புலன்ஸ் பிரிவின் யாழ் பிரதேசப் பொறுப்பாளர் டாக்டர் (திருமதி) பி சர்வேஸ்வரன் அர்களால் முதலுதவிப் பயிற்சி வகுப்புகள் நடாத்தப்பட்டு அதில் சித்தியடைந்தவர்களால் தச்சன்தோப்பு, நாவற்குழிப் பிரதேசங்களில் பயிற்சி நிலையங்கள் நடைபெற்று வருகின்றன. (கி)

## முதலுதவிப் பயிற்சி

இம்மாதம் 6-ம் திகதி மல்லாகம் மகாவித்தியாலயத்தில் முறைசாராப் பிரிவினரால் முதலுதவிப் பயிற்சி வகுப்பொன்று ஆரம்பிக்கப் படவுள்ளது. 10-ம் திகதி வரை இப்பயிற்சி நடைபெறும். பயிற்சிபெறவிரும்புவோர் ஆரம்பதினம் காலை 9 மணிக்குப் பயிற்சி நிலையத்திற்குச் சமுகமளிக்குமாறு தொழில்நுட்பக்கல்வியதிகாரி ச. சுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (கி)

## உண்டியல் திருட்டு

தொல்புரம் வழக்கம்பரை முத்துமாரி அம்மன் தேவஸ்தானத்தில் இரவு வேளை உண்டியல் உடைக்கப்பட்டு, பணம் களவாடப்பட்டுள்ளது

உண்டியல் பூட்டு முன் மண்டபத்தினருகில் பின்னர் கண்டெடுக்கப்பட்டது. கூரையோ, கதவோ பிரியாது களவு நடைபெற்றுள்ளது. (ப 1 கி)

02-10-90 ஆம் திகதிய தொடர்ச்சி

# வீரம் செறிந்த தமிழர் வாழ்வு

— 'மாருதி'

### வீரத்தாய்

போர்க்களத்தில் புறமுதுகிட்டு ஓடுவதை வீரர்கள் அறவே வெறுத்தனர். வயது முதிர்ந்த தாய் ஒருத்தி தன் மகன் போருக்குச் சென்றிருக்கிறான். வெற்றியுடன் வருவான் என்று ஆவலுடன் காத்திருக்கிறாள். அச்சமயத்தில் அவ்வூரைச் சேர்ந்த சிலர் அவளிடம் ஓடிவந்து ''உன் மகன் போரில் தோற்றுவிட்டான், தெரியுமா'' என்றனர்.

அவ்வளவுதான் அத்தாய்க்கு அவமானம் தாழமுடியவில்லை. சினம் தலைக்குமேல் ஏறிற்று. என்ன சொன்னாய்? என்மகனா? தன்மறக்குடிக்கா இழுக்கு விளைவித்தான்! இல்லை! இல்லை!! இது உண்மை என்றால் அவனுக்குப் பாலூட்டிய மார்பகங்களை அறுத்தெறிவேன் என்று சூளுரைத்தாள். அதனோடு நின்றாளா? இல்லை! வாளைக் கையால் எடுத்தாள். நடந்தாள் போர்க்களம் நோக்கி போர்க்களமா அது! செந்நீர் பாய்ந்தோடும் செங்களம். வீரர்கள் குருதிப் புனலில் கிடந்தார்கள். ஒவ்வொரு உடலாகப் புரட்டிப் பார்த்தாள். தன் மகன் மார்பிற் காயம்பட்டு வீரமரணம் அடைந்துவிட்டான், அவள் கதறவில்லை. குமுறவில்லை. பேரானந்தமுற்றாள். எவ்வளவு தெரியுமா? அன்றொருநாள் அவனை ஈன்று எடுத்தாளே அன்று அவள் அடைந்த ஆனந்தத்தை விட மேலான ஆனந்தத்தை இன்று அவன் வீர மரணத்தைக் காணும்போது அடையப்பெற்றாள்.

இதனைப் புறநானூறு எத்துணை அழகாக எடுத்துரைக்கிறது தெரியுமா?

''நரம்பெழுந்து உலறிய நிரம்பா மென்தோள்
முளரி மருங்கின் முதியோள் சிறுவன்
படை அழிந்து மாறினன் என்றுபலர் கூற
மண்டமர்க்கு உடைந்தனன் ஆயின் உண்டஎன்
முலைஅறுத்திடுவென் யான்எனச் சினைஇக்
கொண்டவாளொடு படுபிணம் பெயராச்
செங்களம் துழவுவோன் சிதைந்து வேறாகிய
படுமகன் கிடக்கை காணூஉ
ஈன்ற ஞான்றினும் பெரிது வந்தனளே.''

மகன் வீரமகன்! தாயும் வீரத்தாய்!

இன்னொரு பெண்: இவள் போரில், முதலில் தன் தந்தையைப் பறிகொடுத்தாள். அழவில்லை. பிறகு கணவனையும் இழந்தாள். கலங்கவில்லை. கடைசியாக அவளுக்கு என்று இருந்த ஒரே மகனையும் வெள்ளாடை உடுக்கச் செய்து சிரித்தமுகத்துடன் போருக்கு அனுப்பிவைத்தாள். இவள்போன்று பல வீரப்பெண்மணிகள் அக்காலத்தில் இருந்ததாக இலக்கியம் உரைக்கின்றது.

### புலி இருந்த குகை

வயது முதிர்ந்து, தள்ளாடும் நிலையிலிருக்கும் தாய் ஒருத்தி தெருவால் நடந்து போய்க்கொண்டிருக்கிறாள். செல்லும் வழியில் ஒரு வீட்டின் உள்ளிருந்து ஒரு பெண் அம் மூதாட்டியை, ''என்னம்மா உன் மகன் எங்கே இருக்கிறான்'' என்று கேட்க அம்மூதாட்டி என்ன பதில் சொல்கிறாள் தெரியுமா? ''நீ என்னிடமா கேட்கிறாய்?''

''எனக்கு என்ன தெரியும்? வேங்கை தங்கியிருந்த குகை போன்று என் வயிறு காலியாகக் கிடக்கிறது. அவன் போர்க்களத்தில் தான் இருக்கவேண்டும். வேண்டுமானால் அங்கு சென்று பார்த்துக்கொள்.'' என்று பெருமிதமாகக் கூறி நிற்கிறாள். வேங்கை போன்ற மகனைப்பெற்று இருக்கிறேன் என்ற பெருமை அத்தாய்க்கு இருக்கிறது!

''சிற்றில் நற்றூண் பற்றி நின்மகன்
யாண்டுளனோ எனவினவுதி என்மகன்
யாண்டுளன் ஆயினும் அறியேன் ஓரும்
புலிசேர்ந்து போகிய கல்அளை போல
ஈன்ற வயிறோ இதுவே
தோன்றுவன் மாதோ போர்க்களத்தானே''

### உண்ணா நோன்பு

அக்கால வீரக்குடிமகன் ஒவ்வொருவனும் தன் வீரத்துக்கும் பெருமைக்கும் இழுக்கு நேரும் போதெல்லாம் உண்ணாநோன்பிருந்து உயிர்விடுவது வழக்கம்.

முதுகில் புண்படுவதை வீரர் பெரும் பழியாகக் கருதினர்; பட்டுவிட்டால் வடக்கு நோக்கிச் சாகும் வரை உண்ணாநோன்பிருப்பர். இது வடக்கிருத்தல் எனப்பட்டது.

பண்டைத் தமிழ் நாட்டில் சேர, சோழ, பாண்டியர்களுக்கிடையே நடந்த போர்களுள் குறிப்பிடத்தக்கவை இரண்டு, ஒன்று வெண்ணிப்போர்; மற்றையது தலையாலங்கானப் போர்.

வெண்ணிப் பறந்தலை என்னும் இடத்தில் சோழன் கரிகாலனுக்கும் சேரமான் பெருஞ் சேரலாதனுக்கும் மிகக் கடுமையான போர் நடந்தது. போரில் கரிகாலன் வெற்றி பெற்றான்; சேரமான் புறப் புண்பட்டான். அவன் வீரன்; புறப் புண்ணுக்கு நாணினான் சாகும் வரை உண்ணா நோன்பிருந்து உயிர் விட்டான். இச் செய்தி புறநானூற்றில் வருகிறது :—

''நளியிரு முந்நீர் நாவாய் ஓட்டி
வளி தொழில் ஆண்ட உரவோன் மருக!
களி இயல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்தநின் ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந்தோனே!''

### புலவர் பாடாதொழிக!

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் ஒரு மாவீரன். நீதிக்கும் நேர்மைக்கும் பேர்போனவன். இவனை இளையவன் என்றிகழ்ந்தவன் நாட்டின் மீது படையெடுக்கத் துணிந்தான். அவ்வேளை அவன் கூறிய வஞ்சினம் (சபதம்) இது.

''என்னை இளையன் என்று சொன்ன மன்னனைப் போரில் சிதற அடித்து காவல் முரசத்தோடு அவனைக் கைதுசெய்யாவிடின் என்குடைக்கீழ் வாழும் குடிமக்கள் ''இந்த அரசன் கொடியவன்'' என்று கண்ணீர் விட்டுப் பழிதூற்றும், கொடுங்கோலன் ஆகுக! கல்வி கேள்விகளால் உயர்ந்த நிலைத்த புகழாளராகிய மாங்குடி மருதன் முதலிய புலவர் பெருமக்கள் என்னைப் பாடாது என் நாட்டை விட்டு நீங்குக!''

(வளரும்)

தீவுப் பகுதியில்

## பிணம் தின்ற நாய்கள் ஊளையிட்டு அலைகின்றன

மண்டைதீவு, அல்லைப்பிட்டிப் பகுதிகளில் இராணுவம் புரிந்து சென்ற கோரச் செயல்கள் பற்றிய தவவல் இப்போது படிப்படியாக வெளிவந்து கொண்டிருக்கின்றன.

இராணுவத்தினர் விலை உயர்ந்த பெனாரிஸ், காஞ்சிபுரம் சேலைகளைக் கூட படுக்கை விரிப்பாகவும்இளநீர் பறிக்க மரத்தில் ஏறும் தலை நாராகவும் பயன்படுத்தியும் உள்ளனர்.

பிணவாடையே எங்கும் வீசுகின்றது.

காணி உறுதிகள், அடைச் சீட்டுகள், உணவு முத்திரைகள் மற்றும் விலையுயர்ந்த உடைமைகள் எரிக்கப்பட்டிருந்தன.

பிணங்களைத்தின்ற நாய்கள் பயங்கரமாக ஊளையிட்டவண்ணம் அலைவதையும் காணமுடிகின்றது. (19 — ஸ்ரீ)

## பாண் விலை பலவிதம் மக்கள் நிலை தடுமாற்றம்

மாவின் விலை இப்போது முன்னர் போலின்றி குறிப்பிடத்தக்களவு குறைந்துள்ள போதிலும் பாணின் விலை இடத்துக்கு இடம் மாறுபட்ட வகையில் இருப்பதாகப் புகார் தெரிவிக்கப்படுகிறது.

கல்வியங் காட்டுப்பகுதியில் ஒரு கிலோ மா 19.50, 19.95 எனவும் சுழிபுரப்பகுதியில் 18 ரூபா என்றும் விற்கப்பட்டுவருகிறது.

பாணின் விலை மட்டுவில் பகுதியில் 8 ரூபா, 8.50 என உள்ளது. கல்வியங்காடுப் பகுதியில் ஏழு ரூபாவாகப் பாணின் விலை உள்ளது.

இப்போது விறகும் பெருந் தட்டுப்பாடாக உள்ளதால் ஏழைகளும் நடுத்தர மக்களும் காலை வேளைகளில் அநேகமாகப் பாணை ஆகாரமாகக் கொள்கின்றனர்.

எனவேபாணின் விலை ஒரே சீராக இருக்க உடன் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டுமெனக் கேட்டுக் கொள்ளப்படுகின்றது. ஸ்ரீ

புறநானூறு கலிங்கத்துப் பரணியை

## விஞ்சி விளங்குகிறது விடுதலைப் புலிகளின் வீரம் - கவிஞர் வாஞ்சி

''உலக சரித்திரத்தைப் புரட்டிப்பார்த்தால் ஒரு நாட்டின் கோட்டையைக் கைப்பற்றுவதற்கு ஆயிரக்கணக்கான வீரர்கள் பலியாவதுபற்றிய உண்மைதெரியவரும். புறநானூறு, கலிங்கத்துப் பரணி இதற்குச் சான்று பகரும். ஆனால் யாழ். கோட்டையை மீட்பதில். விடுதலைப் புலிகள் சுமார் 130 பேர் மாத்திரமே தன் இன்னுயிர்ஈந்து சரித்திரசாதனை புரிந்துள்ளனர்.''

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் முக்கியஸ்தர்களில் ஒருவரும், கவிஞருமான மு. வே. யோ. வாஞ்சிநாதன் கரவெட்டியில் நடைபெற்ற போர்க்காலக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்,

அவர் மேலும் பேசுகையில் ''விடுதலைப் புலிகளின் ஆயுத பலம் நவீனமயப்படுத்தப்பட வேண்டியுள்ளது.''

யாழ் கோட்டையை என்ன... பலாலியையும் கைப்பற்றி தமிழீழத்தின் சர்வதேச விமான நிலையமாக அதனை மாற்றியமைக்கும் ஆற்றல் புலிகளுக்கு உண்டு. அதுசாத்தியமே.

இவற்றுக்கெல்லாம் மக்கள் ஆட்பலம், நிதியுதவி, மற்றும் ஒத்தாசைகள் அளிக்க வேண்டும்.

திருமலை, மட்டக்களப்பு உட்பட தமிழீழ மண்ணின் முழுமையும் மாற்றான் நிழல் கூடப்படாது எம்வசமாதல் வேண்டும்.

மக்களின் ஒத்துழைப்பில் தான் சகலதும் தங்கியுள்ளது என்றார். (ஸ்ரீ)

### மக்களுக்கு...

இராணுவத்தினர் நிர்மூலமாக்கி விட்டனர் என்றும் பெறுமதியான உடைமைகள் அவர்களின் வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுவதாகவும் தெரியவருகிறது- 16ஸ்ரீ

### பாடசாலை...

கையால் சேதமாக்கப்பட்ட பாடசாலைகள் ஆகியவற்றைத் திறப்பது பற்றியும், மற்றைய பாடசாலை மாணவர்களைக் குறிப்பிட்ட பாடசாலைகளில் சேர்ப்பது பற்றியும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். 70-து

### நல்லூர்...

ஆகியோர் காயமடைந்துள்ளதுடன் மற்றொரு தொழிலாளி படுகாயமடைந்து மருத்துவ மனைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளார். 66 ஸ்ரீ

### 'கொக்கரக்கோ'...

வைத்திருந்த அத்தியாவசியப் பொருட்களையும் ருசி பார்த்துவிட்டதாகவும் இளநீர்கள் பாளையைப் பாதிக்கும் விதத்தில் முற்றாகச் சீவித்தள்ளப்பட்டுவிட்டதால் தென்னைகள் பயன் தரும் நிலைக்கும்விபரீதம் விளைந்துவிட்டது என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.(19 ஸ்ரீ)

### இலவச...

வடிக்கை எடுத்துள்ளார்.

நேற்றைய தினம் ஓய்வூதியம் பெறுவோர் யாழ் செயலகத்திற்குச் சென்று தமது கஷ்டங்களையும் தமது குடும்பங்கள் பட்டினியால் வாடும் துயர நிலையையும் அரச அதிபருக்கு எடுத்துக் கூறினர்.

இதற்கு யாழ் அரசஅதிபர் பதிலளிக்கையில், இளைப்பாற்றுச் சம்பளம் பெறுபவர்களின் நிலைபற்றி தான் ஏற்கெனவே அரசாங்கத்திற்கு அறிவித்திருப்பதாகவும், மேலும் தொடர்பு கொண்டு விரைவில் அவர்களுக்கு தேவையான பணத்தை கப்பல் மூலம் பெற்றுக் கொடுப்பதாகவும்உறுதிஅளித்துள்ளார்.

இதைவிட அரசாங்கத்திடம் இருந்து ஒய்வூதியம் பெறுவோர் உட்பட ரூபா 1500க்கு மேல் வருமானம் பெறும் சகலருக்கும்நிவாரணமாகஇலவச உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொடுக்கும் நடவடிக்கைகளையும் அரச அதிபர் மேற்கொண்டுவருகிறார்.

கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாகக் கொடுக்கப்படாதிருக்கும் ஒய்வூதியக் கொடுப்பனவுகளுக்கு 105 மில்லியன் ரூபா தேவைப்படுவதாகவும் கணக்கிடப்பட்டுள்ளது. 66ஸ்ரீ

# மக்களை ஏமாற்றியே ஐ.தே.க ஆட்சிக்கு வந்தது -ஸ்ரீமாவோ

''நாட்டில் இன்று ஜனநாயகம் சீர்குலைந்துபோய் மக்கள் பீதியுடனேயே வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். அரசின் தவறுகளை விமர்சிப்பதற்குப் பத்திரிகைகளுக்கும் சுதந்திரம் இல்லை ஆயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டும் காணாமற் போயுமுள்ளனர்

இவ்வாறு சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா இரத்தின புரியில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசுகையில் குற்றம் சாட்டினார்.

அரசுக்கு எதிராக ஐந்து கட்சிகளின் கூட்டு முன்னணி அமைக்கப்பட்டுள்ளதும்இங்கு குறிப்பிடத்தக்கது.

அன்று வாரத்திற்கு எட்டு இறாத்தால் தானியம் தருவோம் தேங்காயை 35 சதத்திற்குத் தருவோமெனக் கூறி பதவிக்கு வந்தவர்களது ஆட்சியில் 11 வருடமாகியும் இன்றைய நிலை என்ன? விலைகள்வானளாவஉயர்ந்து விட்டன. வாழ்க்கைச் செலவும் பெரிதும் அதிகரித்து மக்கள் அதைச்சமாளிக்க முடியாது தத்தளிக்கிறார்கள் ஆனால் ஆட்சியாளர்களோ வினோதசவாரி போகின்றனர் கும்மாளமடிக்கின்றனர் என்று அவர் தனது உரையில் கண்டனம் தெரிவித்தார். ஸ்ரீ

## கோரிக்கை

கடந்த 2-ம் திகதி நல்லூர் ஸ்தான சி. சி. தமிழ் வித்தியாலயத்தில் நடந்த வெளி மாவட்ட ஆசிரியர்களின் கூட்டத்திற்குச் சமுகமளித்து போக்குவரத்து அனுமதிக்காக விண்ணப்பித்த சகல வெளி மாவட்ட ஆசிரியர்களையும் போக்குவரத்திற்கான அனுதியைப் பெறுவதற்காக எதிர் வரும் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு நல்லூர் ஸ்தான சி. சி. தமிழ் வித்தியாலயத்தில் கூடுமாறு இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர்திரு. த. மகாசிவம் கோரியுள்ளார்.

கூட்டத்திற்கு வரும் பொழுதுஅடையாளஅட்டை, கல்வத் திணைக்களத்தில் இடம் பெயர்ந்துள்ளமையை உறுதிப்படுத்தி வழங்கப்பட்ட சான்றிதழ் போன்ற முக்கிய ஆவணங்களை எடுத்து வருவதோடு தம்முடன் அழைத்துச் செல்லும் குடும்ப உறுப்னர்களையும் அழைத்துவருமாறும் கோரப்படுசின்றனர். (12 ஸ்ரீ)

### கொடிகாமம்...

தில் இயக்கச்சிக்கும் ஆனையிறவுக்கு மிடையேயுள்ள பகுதிகளில் சேதமடைந்த மின் இணைப்புக்கள் சீர் செய்யப்பட்டதையடுத்தே இப்பரீட்சார்த்த முயற்சி வெற்றியளித்தது,

எனினும் 33 கே. வி. மார்க்கம் மூலம் பெறப்படும் மின்சாரம் குடாநாடு முழுவதற்கும் வழங்கப் போதியதல்லவெனவும், சுழற்சி முறையில் மின்விநியோகம் மூலம் குறிப்பிட்ட சில பகுதிகளுக்கு மட்டுமே இதன் மூலம் மின்விநியோகம் வழங்கமுடியும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதே வேளை யாழ் மாவட்டத்திலுள்ள பெரும்பாலான மின் மாற்றிகளில் இருந்த எண்ணெய் திருடப்பட்டுள்ளது. அன்றாடம் இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்ற வண்ணமும் இருக்கின்றது!

நேற்றுமுன்தினமும் வரணி, கைதடி வடக்கு ஆகிய இடங்களில் உள்ள மின்மாற்றிகளில் இருந்து இந்த எண்ணை திருடப்பட்டிருப்பதாக சாவகச்சேரிப் பகுதி மின்சார அத்தியட்சகர் முரசொலிக்குத் தெரிவித்தார்

இதே வேளை மின்சாரம் தொடர்ந்து கிடைக்கும் பட்சத்தில் எண்ணெயுள்ள மின் மாற்றிகளில் உள்ள பகுதிகளில் மட்டுமே மின்சாரம் வழங்கக் கூடியதாக இருக்குமென்றும், ஏனைய இடங்களிற்கு நிலைமை சீரடைந்த பின்னர் எண்ணை தருவிக்கப்பட்டதன் பின்புதான் மின்சாரத்தை வழங்க முடியுமெனவும் கூறினார். எனவே அவ்வப்பகுதி மக்கள் அருகேயுள்ள மின்மாற்றிகளில் எண்ணை திருடப்படுவதைத் தடுத்துக்கொள்வதன் மூலம் தமக்கு மின்சாரம் கிடைக்காமல் போகும் துர்ப்பாக்கிய நிலையைத் தடுத்துக் கொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. 71-கி

## 391 தமிழர் ஊனமாகினர்

தமிழ்ப்பகுதிகளில் நிகழ்ந்து வந்துள்ள இராணுவத்தாக்குதல்களின் விளைவாகக் கடந்த சில வருடகாலப்பகுதியில் 391 தமிழர்கள் தம் கால், கைகளை இழந்துள்ளதாக புள்ளிவிவரங்கள் மூலம்தெரிய வருகிறது.

இவர்களில் இருபதுபேருக்கு மட்டுமே மாதாந்தம் இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட ஜெய்ப்பூர் செயற்கை கால் பொருத்தப்படுகின்றது எனவும் கூடிய விரைவில் நொராட்டின் நிதியுதவி கிடைக்கப் பெற்றதும் கூடியளவில் இந்த நடவடிக்கை விஸ்தரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. ப 11ஸ்ரீ

## ★ கல்லுக்குள் ஈரம் ★

ஸ்ரீலங்கா அரசின் தேசியப் பாதுகாப்பு நிதிக்குப் பணம் செலுத்தச் சிங்கள ஆசிரியர்கள் மறுப்புத் தெரிவித்தனராம். நீர் கொழும்பு அரசினர் ஆசிரியர் பயிற்சிக்கலாசாலையில் பயிற்சி பெறும் சிங்கள ஆசிரியர்களே தேசியப் பாதுகாப்பு நிதிக்குப் பணம் கொடுக்க முடியாது என்று ஆர்ப்பாட்டம் செய்து அறவிடப்பட்ட பணத்தையும் மீளப் பெற்றுக்கொண்டனராம். இந்த ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் தமிழ், சிங்கள ஆசிரியர்கள் பயிற்சி பெறுகின்றனர். இவர்களது சம்பளப் பணத்தில் தேசியப் பாதுகாப்பு நிதிக்குப் பணம் கழிக்கப்பட்டு அறவிடப்பட்டதையடுத்தே சிங்கள ஆசிரியர்கள் தமது சம்மதம் பெறாமல் பணம் அறவிடப்பட்டதற்கு ஆட்சேபம் தெரிவித்தனராம். தமிழ் ஆசிரியர்களிடமிருந்து மட்டுமே பின்னர் தேசியப் பாதுகாப்பு நிதிக்குப் பணம் அறவிடப்பட்டதாம். அப்பாவிப் பொது மக்களைப் படுகொலை செய்யும் இராணுவத்திற்காகத் தாம் ஏன் நிதி கொடுக்க வேண்டும் என்று பிரஷ்தாப சிங்கள ஆசிரியர்கள் கலாசாலை அதிபரிடம் வாக்குவாதப்பட்டனராம். (36 ஸ்ரீ)

## இவர்களுக்கும் அழைப்பு

பலாலி ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர், ஆசிரியப் பயிலுநர், ஊழியர்கள் அனைவரையும் எதிர் வரும் திங்கள் காலை 9-30 மணிக்குக் கலாசாலைக்கு வருகை தருமாறு அதிபர் கேட்டுக்கொள்கின்றார். (ஸ்ரீ)

### அரச...

இருவருக்கு 85 ரூபா, மூவருக்கு 105 ரூபா, நால்வருக்கு 125 ரூபா, ஐவருக்கு155 ரூபா, அறுவருக்கு 170 ரூபா, எழுவருக்கு 185 ரூபா, எண்மரும் அதற்கு மேற்பட்டோருக்கும் 200 ரூபா என்ற அடிப்படையில் வாரம் ஒருமுறை அண்மையில் உள்ள கூட்டுறவுக் கடை ஒன்றில் உணவுப் பொருட்களைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டிருக்கின்றது.

கடந்த ஆனி மாதம் 11-ம் திகதிக்குப்பின்னர் வன்செயல்கள் காரணமாக மரணித்த ஒருவரின் மரணச் செலவிற்காக ரூபா 2000 வழங்கப்படவேண்டும் என்றும் அந்தச் சுற்று நிருபத்தில் கூறப்பட்டுள்ளது.

இது பற்றியாழ்அரசஅதிபர் கருத்துத் தெரிவிக்கையில் ''இச் சுற்று நிருபம் சம்பந்தமாகத் தான் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து மிக விரைவில் நிவாரணப் பொருட்களை வழங்கவும் அதற்குரிய திகதியை அறிவிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இது சம்பந்தமாக ''நிவாரணப் பங்கீடு அரச ஊழியருக்கும்'' என்ற தலைப்பில் நேற்றுமுன்தினம்'முரசொலி' பிரத்தியேகச் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்ததும் இங்கு குறிப்பிடத்தக்கது. (66ஸ்ரீ)

## வீரமரணம்

நேற்று மாலை தொண்டமானாற்று ஆற்றில் தவறுதலாக வெடித்த ஷெல்லினால் ரவாஸ் (பரமகுரு ஜெயராசா இன்புருட்டி, அல்வாய் வடக்கு அல்வாய்) வீரமரணமடைந்துள்ளார். (து)

## இன்று சமுகமளிக்கவும்

இலங்கை வங்கியின் யாழ் ஆஸ்பத்திரி வீதிக்கிளையில் கடமையாற்றும் சகல ஊழியர்களும் இன்று காலை 9 மணிக்குச் சமுகமளிக்குமாறு முகாமையாளரால் கோரப்படுகின்றனர் (ஸ்ரீ)

### காவலூரில்...

வாய்க்கிழமைநிகழ்ந்துள்ளது.

நாரந்தனைப் பகுதியைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தை வசிப்பிடமாகக் கொண்டவருமான ப. ஜோப்ஸ் என்பவரே இவ்வாறு கோரமாக வெட்டிக்கொல்லப்பட்டவராவர் 20-கி

### இன்று...

நெல்லியடி மூத்த விநாயகர் ஆலய முன்றலில் இருந்து பி. ப. 3மணியளவில் ஆரம்பமாகும். இந்த எழுச்சி ஊர்வலமும் பன்னிரு வேங்கைகளின் நினைவுத் தூபிகள் நிறுவப்பட்டுள்ள திருவில் வெளியைச் சென்றடையும்.

வல்வைத் திருவில்வெளியில் நடைபெறவுள்ள அஞ்சலிக் கூட்டத்தில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி, விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி ஆகியவற்றின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டு உரையாற்றுவார்கள்.

இவ்வஞ்சலிக் கூட்டத்திற்கு வருகை தரும் மக்களின் வசதி கருதி பிரதேசவாரியாக வாகனவசதிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. (44-ஸ்ரீ)

இப்பத்திரிகை முரசொலி பப்ளிஷர்ஸ் (பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ் கல்வியங்காடு டச்சுவீதி, லக்ஷ்மிபில்டிங்' இல் உள்ள அச்சகத்தில் 05 10-90 அச்சிட்டு வெளியிடப் பெற்றது.